மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு கஷ்டப்பட்டு வந்த பாலத்தையே முடிப்பதற்கு நான் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறேன். ஆனால் நகராட்சிக்குள்ளே இருக்கிற பாலத்தை முடிப்பதற்கு இன்னும் நாட்களாகும். எனினும் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை நான் மதிக்கிறேன்.

சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்துதல்.

*3838 திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

9-50 மணி

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதுகுளத்தூர், கமுதி வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக இருப்பதால், அங்கே வேறு எந்த சிறு தொழிலையும் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில் அரசாங்கம் ஒரு சிறு தொழில் பேட்டையை உருவாக்க முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்த மன்றத்தில் பல கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் தொழில்கூடங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி விளக்கமாக நான் அறிவித்திருக்கிறேன். அரசாங்கம் முன் வந்து ஒரு இடத்தில் தொழில் கூடங்களைக் கட்டி, அங்கு இருக்கக்கூடியவர்களைத் தொழில் தொடங்குங்கள் என்று கட்டாயப்படுத்த முடியாது. எனவே எந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் தொழில் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறார்களோ அவர்கள் இருபது பேர் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்திற்கு விண்ணப்பத்தைத் தர வேண்டும், ''இந்தப் பகுதியில் நாங்கள் சிறு தொழில் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறோம், அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்'' என்று. குறைந்தபட்சம்

1990 ஏப்ரல் 3]

இருபது பேர் அரசுக்கு விண்ணப்பத்தை அனுப்பினால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நில வசதி, போக்குவரத்து இணைப்பு, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழில் பேட்டைகளை அமைத்து தருவதற்கு இந்த அரசு முன் வரும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதுகுளத்தூர் பகுதியில் தமிழ்நாடு மெக்னீஷியம் பிளான்ட், கார்ப்பரேஷனுக்கு சம்பந்தப்பட்ட உப்பு தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளை எல்லாம்ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் அதற்கு உபதொழிலாக முதுகுளத்தூர் பகுதியிலே ஒரு சிறு தொழில்பேட்டையை உருவாக்கினால் அதிகமான பேர் தொழில் செய்வதற்கு, முனைவதற்குத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்த வசதிகளெல்லாம் இப்பொழுது அங்கே இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட மனுக்கள் நிச்சயமாக அரசுக்கு அனுப்பப்படும். நடப்பாண்டிலேயே அந்தச் சிறு தொழிற்பேட்டையை அங்கே உருவாக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுக்கு வரப் பெறுகின்ற விண்ணப்பங்களை அடிப்படையாக வைத்து உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டுப்பூச்சி வளர்ப்பு.

*7005 திரு. கே. ரமணி :

மாண்புமிகு சமூக மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா, மலைப்பகுதியான குத்தியாலத்தூர், குன்றி, கூத்தம்பாளையம் கேர்மாளம், திங்களூர் ஊராட்சிகளில் பட்டுப்பூச்சி வளர்ப்புக்கான முசுக்கொட்டைச் செடியை 'ஊசி ஈக்கள்' தாக்குவது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அந்த ஊர்களிலேயே பட்டுப்பூச்சி வளர்க்க விவசாயி களுக்கு பயிற்சியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?